6th August 1955]

THE HON. SRI B. PARAMESWARAN :—" The particulars for the year 1954–55 are as follows :—

College. (1)		Number of applications received. (2)	Number granted. (3)
St. Xavier's college	..	8	7
St. John's College	..	5	5
Hindu College	..	..	..

SRI R. S. ARUMUGAM :—" கல்வி ஸ்தாபனங்களில் தலைமை ஆசிரியர்கள் மூலமாக பரீக்ஷை பீஸ் கன்செஷனுக்காக மனுக்கள் அனுப்ப வேண்டியிருக்கிறதனால் மேற்படி தலைமை ஆசிரியர்களுக்கு சிரமம் இருப்பதனாலோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ பாரத்தை அனுப்பாது இருக்கிறார்கள். அதைத் தவிர்க்க எல்லாத் தலைமை ஆசிரியர்களும் கண்டிப்பாக அனுப்ப வேண்டும் என்ற முறையில் ஏதாவது தாக்கீது அந்தத் தலைமை ஆசிரியர்களுக்கு சர்க்காரிலிருந்து அனுப்புவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN:—" டிரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் மூலமாக அந்தக் கன்செஷனுக்கு வேண்டிய பாரங்களை அனுப்பும்படியாகச் சொல்லியிருக்கிறேன். எங்காவது அப்படி அனுப்பவில்லையென்று சொன்னால் அதை நாங்கள் கவனிக்கிறோம்."

SRI S. R. ARUMUGAM :—" பரீக்ஷை பீஸ் பரீக்ஷை முடிந்தவுடனே திருப்பிக் கொடுக்கப்படுகிறது. அதை முதலில் அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு பிறகு திருப்பிக் கொடுப்பதை விட தகுதியுள்ளவர்களுக்கு பரீக்ஷை பீஸ் வாங்காமலே இருப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" ஸ்காலர்ஷிப்களிலேயே அதைச் சேர்த்துக் கொடுக்கலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்."

Construction of a bridge over the Pudiyur Nayakan Lake.

* 1964 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal with the Government to construct a bridge over the Pudiyur Nayakan Lake after removing the temporary passage which is on the ninth mile of the road leading from Vriddhachalam to Aladi?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" No, Sir."

Visit of the Chinese Cultural Mission.

* 1965 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Finance be pleased to state the expenses incurred by the Government in connexion with the visit of the Chinese Cultural Mission to this State?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" An expenditure of Rs. 1,154–2–0 was incurred by this Government in connexion with the visit of the Chinese Cultural Mission to this State."

SRI K. T. RAJU :—" சீனக் கலா கோஷ்டி சென்னைக்கு வந்திருந்தபோது அவர்கள் நடத்திய கலா நிகழ்ச்சிகளின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" என்னிடத்தில் அதைப் பற்றிய புள்ளி விவரங்கள் இல்லை. அதிகமாகக் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை."